இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அது 77-க்குப் பிறகு வந்த சங்கம் அல்ல. அதற்கு முன்பே அந்த சங்கம் நடந்து வருகின்றது. அந்த சங்கத்தை நடத்தி வருகின்றவர்கள் இந்த ஆட்சிக்குச் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல என்பதை தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) குழாய்க் கிணறுகளில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வட ஆற்காடு மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் எடுத்த இடத்தில் கைப்பம்புகள் வைக்கவேண்டிய அவசியம் குறித்து திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், எல். பலராமன், என். ஏ. பூங்காவனம், எம். ஆறுமுகம், ப. சுந்தரம், பாபு ஜனார்த்தனன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் எடுத்த இடத்தில் கைப்பம்புகள் வைக்க வேண்டிய அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன். அதிலே இரண்டாவது பாராவிலே ''மாநிலத்திலே'' என்று இருப்பதை ''மாவட்டங்களில்'' என்று திருத்தி அமைத்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிக்கை

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 18-4-1981 வரை வறட்சி நிவாரணத்திற்காக நிர்மானிக்கப் பட்டுள்ள 262 ஆழ்துளைக் குழாய் கிணறுகளில் 73 கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு பயனில் உள்ளன. மீதமுள்ள 189 குழாய்க் கிணறுகளில் உடனடியாக கை இறைப் பான்கள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. பொதுவாக தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக, அரசு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் குடிநீர் வசதி அளிக்க உத்திரவிட்டுள்ள இப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால் வாரியத்தின் கைவசம், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் குடிநீர் திட்டங்களுக்கும், மற்றும் பராமரிப்புத் திட்டங்களுக்கும் தேவையான கைப்பம்பு களே இருந்தன. வறட்சி நிவாரணப் பணிகளை உடனே

1981 மே 13] [திரு. எஸ். இராகவானந்தம்]

மேற்கொள்ள வேண்டியிருந்ததால், இப்பகுதிகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டு முதற்கட்டமாக குழாய்க் கிணறுகள் நிர்மானிக்கப்பட்டு இருப்பிலுள்ள கை இறைப்பான்கள் முதலில் பொருத்தப்பட்டுள்ளன. வறட்சி திட்டப் பணிகளுக்காக 13,650 கை இறைப்பான்கள் பெறுவதற்கான உத்திரவுகள் பல்வேறு நிறுவனங்களுக்கு இடப்பட்டுள்ளன. இவைகளில் 1,900 கை இறைப்பான்கள் இதுவரை பெறப்பட்டு, அவைகளை மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறுகளில் பொருத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பொருத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஏப்ரல் இறுதிக்குள் 2,400 கை இறைப்பான்களும், மே இறுதிக்குள் 2,850 கை இறைப்பான்களும் பெறப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மே மாதம் முதல் வாரியத்தில் இருப்பில் தேவைக்கு ஏற்ப வைத்துக் கொள்ளும் நிலைமை பெற்று, ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டவுடன் அவைகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு, மக்கள் உடனுக்குடன் குடிநீர் பெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

* திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையிலே வட ஆற்காடு மாவட்டத்திலே 262 ஆழ்துளைக் குழாய் கிணறுகளில் 73 கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றது என்று சொல்லப் பட்டிருக்கின்றது. மீதமுள்ள 189 கிணறுகளில் கைப் பம்புகள் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் தேவை என்று கருதி மொத்தம் 13,650 கைப் பம்புகள் போடப் பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் 1,900 கை பம்புகள் வந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே அந்த 13,650-ல் வட ஆற்காடு மாவட்டத்திற்கு மட்டும் 1,900 கைப் பம்புகளா என்பதை விளக்கவேண்டும். அது மட்டு மல்லாமல் இங்கே 73 போடப்பட்டிருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. மற்றவற்றை எப்போது போடுவார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்த அறிக்கையைத் தொடர்ந்து படித்தால் அது தெரியும். அதிலே 1900 கை இறைப்பான்கள் பெறப்பட்டு மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அப்படி முன்னுரிமை கொடுத்து கைப்பம்புகளைப் பொருத்துவதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. என். ஏ. பூங்காவனம் : 262 போர் வெல் போட்டிருக் கிறார்கள். இதிலே 60 போர்கள் வேலை செய்யவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? என்னுடைய தொகுதியில் ஆர். எஸ். புரத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். குடியாத்தம் இரயில்வே ஸ்டேஷன் முன் போடப் பட்ட மெயினில் இருந்து தண்ணீர் எடுப்பதாகக் கடிதம் எழுதி இருப்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 262 ஆழ்துளைக் குழாய் கிணறுகளில் 73 கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்தப்பட்டு பயனில் உள்ளன. மீதம் உள்ள 189 குழாய்க் கிணறுகளில் கை இறைப்பான்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இந்த விவரம்தான் என்னிடத்திலே இருக்கின்றது, மற்ற விஷயங்களுக்கு என்னிடத்திலே தகவல் இல்லை.

(ஈ) வேலை நிறுத்தம் செய்துள்ள ஃபைட்டோ கெமிகல்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் கைது செய்யப் பெறுவது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மதுரை மாவட்டம் சோழவந்தானில் ஃபைட்டோ கெமிகல்ஸ் நிறுவனத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டது குறித்து திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, க. பாரமலை, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், ஏ. சந்திரசேகரன், ப. நெடுமாறன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர் அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு. வருவார். திரு. ஏ. சந்திரசேகரன்.

திரு. ஏ. சந்திரசேகரன்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் சோழவந்தானில் ஃபைட்டோ கெமிகல்ஸ் நிறுவனத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றினை வைக்கிறேன்.

அதில் கடைசியில் '11 ஆம் தேதியன்று ஒப்பந்தம் ஏற்பட்டு 13 ஆம் தேதியன்று தொழிலாளர்கள்' வேலைக்குப் போகிறார்கள் என்கிற வரியினையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்,

அறிக்கை.

மதுரை மாவட்டத்திலுள்ள கோத்தாரி ஃபைட்டோ கெமிகல்ஸ் (இண்டர்நேஷனல்) என்னும் நிறுவனத்தில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணை மற்றும் தாவரங்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட சாறு தயாரிக்கும் பணிநடைபெறுகிறது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 175 தொழிலாளர்கள் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்களின் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.